RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22128

# குறுந்தொகையில் பாலைத் திணைப் பாடல்கள் வெளிப்படுத்தும் வாழ்வியல் கூறுகள்

க. இரமேஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மனிதநேய பள்ளி, தமிழ்நாட்டு மத்தியப் பல்கலைக்கழகம், நீலக்குடி வளாகம், திருவாரூர்-610005, தமிழ்நாடு, இந்தியா

# Aspects of Life revealed by the Songs of the Paalai Thinai in Kurunthokai

G. Ramesh [a, *]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, School of Social Science and Humanities, Neelakudi, Thiruvarur-610005, Tamil Nadu, India

* Corresponding Author:
rameshg@cutn.ac.in

Received: 30-10-2021
Revised: 09-01-2022
Accepted: 15-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

Man lives in a certain living environment in which he co-exists, contradicts, has conflicts, and is harmonious as a member of society. He produces literature as an expression of the state of consciousness that is due to the practices of life. It is associated with the life of mankind at all three levels of its origin, meaning, and use. The people of the Sangam age considered the life of this world very much. The goal was to live happily in this world. The basis of their life was that they should live with morality, wealth, and enjoyment. Domesticity is the result of the gradual development of human society at every stage, and the human race, which lived in the forests and mountains, began to live an organized life of its own.

**Keywords:** Human Society, Paalai Thinai, Sangam Age, Life, Human Race

## முன்னுரை

சங்க காலத்தில் தமிழர்களின் குடும்ப வாழ்வு உயர்ந்த நிலையில் இருந்தது. அவர்களது இல்லற வாழ்க்கையானது முதன்மையான இடத்தை வகித்தது அவர்களது வாழ்க்கையே அற வாழ்க்கையாக அமைத்துக் கொண்டனர். இல்லறத்திற்கு உயர்ந்த இடத்தினை வழங்கியிருந்த அவர்கள் துறவினையும் மதித்தனர். எனினும் திருமணம் ஆகாமலேயே துறவற நிலைக்குச் செல்வதனை அவர்கள் பெரிதாக மதிக்கவில்லை. குடும்பம் என்பது சமூகத்தின் ஓர் அங்கம். இந்தக் குடும்பம் என்ற அமைப்பு மக்களை ஒழுக்கமுடன் வாழத் துணைநின்றன.

குடும்ப அமைப்பானது சிறப்பான வாழ்க்கைக்கு வழிவகுக்கின்ற காரணத்தினால் குடும்ப வாழ்க்கையானது பண்டைக் காலத்தில் செம்மையாக இருந்துள்ளது. குடும்ப ஒழுகலாறுகளான களவு, கற்பு, கணவன், மனைவி மக்கள் உறவுமுறைகள், பணியாளர்கள் முதலானவற்றின் மூலம் இல்லற வாழ்வினை அறிந்துகொள்ள முடிகின்றது.

## வாழ்க்கை அமைப்புமுறை

அறநெறியிலே பொருளீட்ட வேண்டும். மனமொத்த ஆடவரும் பெண்டிரும் கூடி இல்லறம் நடத்த வேண்டும். மக்கட் பேற்றினைப் பெற்று மகிழ வேண்டும்.

“குடும்பம் என்பது இயக்கமுள்ள சித்தாந்தத்தைக் குறிப்பது. அது என்றைக்கும் இயங்காதிருப்பதில்லை. சமுதாயம் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேற அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்துக்கு முன்னேறுகிறது. இக்கருத்துக்கள் அனைத்தும் குடும்ப அமைப்பென்பது விடாப்பிடியான தொடர்ச்சியைக் கொண்டுள்ளது என்பதையே எடுத்துரைக்கின்றன” ந. தர்மராஜன் (மொ.பெ) என்று எங்கல்ஸ் கூறுகின்றார் (Engels, 1973).

இல்லறத்தையே மக்கள் சிறந்ததாகக் கருதி வந்தான். இறைவன் மக்களை ஆணும் பெண்ணுமாய் படைத்தார். அவர்கள் கூடி வாழ்தற் பொருட்டே வீடுபேற்றை அடைய முடியும் என்பதை,

“அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்

போஒய்ப் பெறுவது எவன்” (Krishnamoorthi, 1993)

நல்ல அறவழியில் நின்று இல்வாழ்க்கையை நடத்தினால், அவன் பிற வழிகளில் சென்று பெறும் பயன் ஒன்றும் இல்லை என்று வள்ளுவர் கூறுகிறார். ‘இல்லறமல்லது நல்லறமன்று’ ஔவையார் கூறுகிறார். சங்க நூல்கள் என்று கூறப்படுகின்றவை எல்லாம் தனிப்பாடல்களின் தொகுப்புகள்தான். பழந்தமிழ் நூல்களிலே, முழு நூலாக முதலில் பிறந்த நூல் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்ட ஒப்பற்ற நூல் திருக்குறள் ஒன்றுதான். அது மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டும் சிறந்த நூல் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அந்நூலும் பழந்தமிழர் கொள்கையை ஒட்டி அறம், பொருள், இன்பங்களைப் பற்றியே கூறிச் செல்கின்றது. இவ்வுலகில் மக்கள் சிறந்து வாழ்வதற்கான வழியையே காட்டுகின்றது. இதுதான் பழந்தமிழர் பண்பாடாகும்.

## குடும்பம்

“குடும்பம் என்ற சொல்லுக்கு உறவு, ஒரு குடியில் உள்ளோர் மனைவி, வீடு, உறவினர், குலம், குடி, இனத்தார் ஒரு குடியில் உள்ளோர்” சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, (1920)

என்று தமிழ்ப் பேரகராதி பொருளுரைக்கின்றது. சங்க இலக்கியங்களில் குடும்பம் என்ற சொல்லாட்சி காணப்படவில்லை.

சங்க காலத்தில் தலைவன், தலைவியை மணந்து கொள்ளவும், மணம் முடித்துப் பின், இல்வாழ்வு நடத்தவும் பொருள் தேடச்செல்கிறான். அப்பொருளைக் கொண்டு, தலைவன், தலைவி இல்வாழ்வினை எவ்வாறு நெறிப்படுத்தி வாழ்ந்தான் என்பதைக் குறுந்தொகையின் பாடல்களைக் கொண்டு அறியலாம்.

தமிழ்ச் சமுதாயத்தில் ஆடவர்களே குடும்பத்தினைக் காக்கும் தலைமைப் பொறுப்பைப் பெற்றிருந்தனர். இறுதி வரையில் குடும்பத்தினைக் காக்கும் கட்டுப்பாடுடைய தலைவன், காதல் வாழ்வில் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்வதற்கும், அறிவு வாழ்வில் தான் திருமணம் செய்து கொண்டு நல்வாழ்வு வாழவும் பொருள் தேடிச் செல்கின்றான்.

தேடிய பொருட்களைக் கொண்டு இல்லறக் கடமைகளில் ஒன்றாகிய விருந்தோம்புதலையும், சுற்றத்தைத் தழுவுதலையும் விறியோன் துன்பம் துடைத்தலையும் தன் தலையாயக் கடமையாக மேற்கொண்டான். இலைகளைச் சிறப்புச் செய்து வாழ்வைச் செம்மையாகவும், வளமாகவும் வாழ்ந்திட எண்ணிய இல்லறப் பொறுப்புடைய தலைவன் பொருள் ஈட்டுதலிலும் அதற்காக வினைகள் பல செய்திடவும் துணிந்தான்.

இத்தகுத் தலைவனைத் தொல்காப்பியம்,

“பெருமையும் உரனும் ஆடூஉ மேன” (Veerasamy, 1931)

என்கிறது. தலைவனுக்குப் பெருமையும் துணிந்து செயல்படும் ஆற்றலும் வேண்டும். மேலும், வாழ்வதற்கு அறம், பொருள், இன்பம் மூன்றும் மிகத் தேவை என்பதனை,

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" (Govindaswamy Pillai, 1993)

என நூற்பா சுட்டுகிறது. அதாவது, வாழ்வின் உறுதிப் பொருட்களில் ஒன்றாகப் பொருளையும் சுட்டியிருப்பதைக் காணலாயினர்.

## அறவழியில் இல்லறம்

மக்கள் தாங்கள் வாழும் வாழ்க்கையானது அறவழியில் அமைய வேண்டும் என எண்ணினர். அதன் பொருட்டே அவர்கள் அறவழியில் வாழ்ந்தனர். இவ்வாழ்க்கை அறவழி அல்லாது சமூகத்துடன் தொடர்புடையதாகவே இருந்தது. இதனை,

"எழில்மிக உடையது ஈங்குஅணிப் படூஉதட

திறவோர் செய்வினை அறவது ஆகும்

கிளையுடை மாந்தர்க்குப் புளையும்மார் இல்என" (Govindaswamy Pillai, 1993)

சான்றோர் செய்கின்ற செயல்கள் அறத்தோடு பொருந்தியதாகும். வருத்தம் தருவதற்கு உறவுடைய கற்றத்தார்க்கு வேறு வகையாக எதுவும் இல்லை என்று தோழி தலைமகட்குக் கூறியதாக பாடல் அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக் கொண்ட ஒரு செயலை அறவழியில் நின்று திருத்தமுற முடிப்பதென்பது யாவர்க்கும் பயன் விளைவிப்பதாகும். இச்செயல் வடிவிலான பயன்பாடுகள் பற்றி பழந்தமிழ் இலக்கியங்களில் மிகச் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இதனை,

"பெய்துஇனி வாழியோ பெருவான் யாமே

சேய்வினை முடித்த செம்மல் உன்னமொடு" (Govindaswamy Pillai, 1993)

நினைத்த வண்ணம் செய்வினைகளை முற்றுவித்ததனால் தோன்றிய நிறைவான உள்ளத்தோடு தலைவியுடன் விரும்பி வாழ்தல் என்ற பொருள் முடிவு கூறப்படுகிறது.

## தொழிற்சிறப்பு

தன் குடும்பம் வளமோடு வாழவும், வேளாண்மை செய்து பொருளினால் வாழ்ந்த மக்களையும் குறுந்தொகை சுட்டுகிறது. குறவன் ஒரு முறை விதைத்த திணையின் கதிர்களைப் பெற்று மகிழ்வோடு, அவற்றின் மறுகாலில் விளையும் அவரைக் காய்களையும் பெற்று மகிழ்கின்றான் என்பதனை,

"பெரும்புனக் குறவன் சிறுதிணை மறுகால்

கொழுங்கொடி அவரை பூக்கும்" (Govindaswamy Pillai, 1993)

என்ற வரிகளிலிருந்து உணரலாம். ஒரு சேரவே இரண்டு என்ற வரிகளிலிருந்து தொழில்நுட்பச் சிறப்பு அறிந்து பயிர் செய்து வாழ்ந்தனர் என்பதைக் குறுந்தொகை வழி அறிய முடிகிறது.

## இல்லக் கடமையில் தலைவன்

இல்லக் கடமை செய்வதிலும் தலைவனது பொருள் தேடலிலும் பெரும் பங்கு வகிப்பதை அனைவரும் அறிந்ததே. இளமை, இன்மை பெற்ற வாழ்வு வளம் பெறுவதற்காகக் காலம் நீட்டித்தாலும் பொருள் முற்றிய பின்னரே, தலைவன் இல்லம் திரும்புவான் என்று தலைவி கூறுகிறாள்.

"இளமை பாரார் வளமை நசை இச்சென்றோர்

இவனும் வாரார் எவணரோ" (Govindaswamy Pillai, 1993)

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இதிலிருந்து தலைவனின் பொருள் ஆர்வத்தையும் பொருள் தேடலின் அவசியத்தையும் அறிந்து கொள்ளலாம்.

## பொருள் சேமித்தலில் தலைவன்

உழைத்துக் கொண்டு வரும் பொருளை, வரவுக்கு மீறிச் செலவு செய்யாது, சிக்கனமாகச் செலவு செய்து, பொருளைச் சேமித்து, குடும்பத்தை நடத்தி வருவதில் தலைவியின் பங்கு முக்கியமானதாகும். துலைவியின் பொறுப்புடைய செயலினால், ஏழ்மையான நிலையில் இருந்து, செல்வ நிலையை அடைந்தான் தலைவன்.

இத்தலைவியை

"யாய் ஆகியளே விழவு முதலாட்டு" (Govindaswamy Pillai, 1993)

எனும் வரி உணர்த்துகிறது. விழவு முதலாட்டி என்ற சொல் திருமணத்திற்குப் பின்னரே தலைவன் வளமுடையளவனாவான் என்பதைக் குறிக்கும். இங்குப் பொருளாதார மேம்பாடே இல்லற மேம்பாடு என்பது அறிவுறுத்தப்படுகிறது.

## பொருள் பயன்பாடு

ஒருவன் தாளாற்றித் தந்த பொருளைப் பகுத்துண்டு வாழ்வதைத் தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும். தாயத்தால் வரும் செல்வத்தைப் போற்றிக் காப்பது ஒன்றே தன் கடமை எனவும், அதனைக் குறைப்பதற்கோ, அழிப்பதற்கோ எவ்வகையிலும் தனக்குரிமை இல்லை எனவும் ஒருவன் அறிதல் வேண்டும். முன்னோர்கள் தேடித் தொகுத்தப் பொருளைத் தனக்காகப் பயன்படுத்துவானாயின், அவன் இறந்தவனாகவே கருதப்படுவான் என்பதனை,

"உள்ளது சிதைப்போர் உளர் எனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை இரவிலும் இளிவு எனச்

சொல்லிய வண்ணம் தெளியக் காட்டி" (Govindaswamy Pillai, 1993)

எனும் வரிகள் உணர்த்துகின்றன. பிறருக்குக் கொடுப்பதன் மூலமே இல்லற வாழ்வு இனிமை பெறும் என்பதாம். இவ்வாறு தன் இல்லறத்தைப் பிரிந்துப் பொருள் தேடச் சென்று, தலைவன் கொணர்ந்தப் பொருளை மகிழ்வேண்டும், பொறுப்பேடும் உளமொத்த அன்போடும், வாழ்வின் முழுப்பயனை அடைதலின் பொருட்டு இல்லற நெறிக்காகச் செலவிட்டும் விருந்தாற்றியும் மகிழ்கின்றனர்.

## ஈகைத்திறன்

'ஈதல் இசைப்பட வாழ்தலே வாழ்க்கையின் ஊதியம்' என்ற சிலம்பொலி க.செல்லப்பனின் சொற்றொடர்க்கேற்ப வாழ்வில் ஒவ்வொரு நாளும் இல்லாதவர்களுக்கு ஈதல் வேண்டும். வறியவர்களுக்கு உதவி செய்யாமல் கழியும் நாள் வீணாகக் கழியும் நாளாகும்,

"மெல்லியல் அரிவை நின் நல் அகம் புலம்ப

நின்துறந் அமைகு வென்ஆயின் என் துறந்து

இரவலர் வாரா வைகல்

பல ஆகுக - யான் செலவுறு தகவே" (Govindaswamy Pillai, 1993)

பொருளின்மையால் இவ்வுலகில் எவ்வளவோ மக்கள் உழன்றுக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு இரங்கித் தர்மம் செய்தல் வேண்டும். தர்மம் தலைகாக்கும் என்ற சொற்றொடருக்கு ஏற்ப, வறியவரக்குக் கொடுத்து உதவுதலே பண்பாகும்.

## பண்பு நலன்

"பண் பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" (Nachinarkiniyar, 1925)

என்று கலித்தொகை உணர்த்துவது போல், பண்பு எனப்படுவது ஒவ்வொருவரிடத்தும் காணப்படும் சிறந்தொரு மனப்பான்மையாகும். கற்றவரே யாயினும் பண்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் கல்லாதவர்க்கு ஒப்பாவர். அனைவரிடத்திலும் இன்சொற்களைக் கூறி அவருடன் நல்குதல் சிறந்த பண்பாக அமைகிறது. ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் சொல்வது நன்னெறியாகும்.

## உழைப்பின் பெருமை

உழைப்பு என்பது மனித வாழ்வியலில் முக்கியப் பங்காற்றுகிறது. உழைப்பு இல்லாமல் எந்தச் செயலும் நடைபெறுவதில்லை. உழைக்காமல் இருந்தால், அவன் புவியில் வாழ்வதற்கு மதிப்பில்லாமல் போய்விடும்.

ஒருவன் அதிக செல்வம் வைத்திருந்தாலும், அவன்பின் வருபவன், மீண்டும் உழைப்பை நாடி செல்வத்தைச் சேர்க்கிறான். வாழ்க்கை வாழச் செல்வம் தேவை. அதைப் பெறுவதன் பொருட்டு உழைப்பை நாட வேண்டும்.

"உள்ளது சிதைப்போர் உளர் எனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை இரவிலும் இளிவு, எனச்

சொல்லிய வன்மை தெளியக் காட்டிச் சென்றனர்" (Nachinarkiniyar, 1925)

தம் முன்னோர் வைத்துள்ள செல்வத்தைச் செலவழித்து வாழ்க்கை நடத்துவது முயற்சியில்லாமல் முன்னோர் பொருளைச் செலவழித்து வாழ்பவர்கள் வாழ்வு, பிச்சையெடுத்து வாழ்வதைவிட இழிவானதாகும் என்று இப்பாடல் வரிகளின் மூலம் சுட்டப்படுகிறது.

## வாழ்க்கைத் தரம்

குறுந்தொகை மக்களின் வாழ்க்கைத் தரம் வெவ்வேறாய் இருந்துள்ளது.

"இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு"

"இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு" (Nachinarkiniyar, 1925)

எனவும் இடம்பெறும் வரிகள், இல்லாதோராகிய வறியவரைச் சுட்டி, அவர்கள் வாழ்வில் இன்பம் என்பதே கிடையாது என்றும், அவ்வாழ்க்கை இரந்து வாழ்தலினும் கொடியதெனவும் குறிப்பதிலிருந்து வாழ்வின் அவலத்தையும் அறிய முடிகிறது.

## முடிவுரை

நாகரிகம் வளர வளர, மனிதர் சிறு கூட்டமாக இருந்து வாழ்ந்த நிலையிலிருந்து பெரிய சமுதாயமாக வாழும் நிலைக்கு உயர்ந்துள்ளனர். மக்களின் வாழ்க்கைமுறை இயற்கையோடு ஒன்று காணப்பட்டது. அவர்கள் நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பிரித்து அந்நிலப் பகுதிகளில் தங்களின் வசதிக்கேற்ப இல்லங்களையும் வாழ்க்கையையும் சிறப்பான முறையில் அமைத்து வாழ்ந்தனர். சங்ககால மக்களின் வாழ்க்கைமுறை என்பது ஒழுங்குப்படுத்தப்பட்ட நெறியான வாழ்க்கையாகும். காலங்காலமாக மங்காப் புகழோடும், மனம் நிறைந்த பூரிப்போடும் வாழ்ந்தனர். இவ்வாழ்க்கை முறையானது பிற்கால சந்ததியினருக்கு மாபெரும் இலக்கணமாகத் திகழ்கின்றது. எந்த ஒரு இலக்கியமும் மனிதனுடைய வாழ்வியலைத் தாண்டிப் படைக்கப்படுவதில்லை. அவ்வகையில் குறுந்தொகை இல்லக்கடமை, தொழில் சிறப்பு, சேமிப்பு,

பொருள் பண்பாடு, ஈகைத்திறன், பண்புநலன், உழைப்பின் பெருமை, நம்பிக்கை, வாய்மை, மழை, வாழ்க்கைத்தரம், வாழ்க்கைக் கோட்பாடுகள், களவு வாழ்வு, கற்பு வாழ்வு, இல்லறம், பிரிவச்சமும் செலவழுங்கலும், பொருட்பிரிவு, மதிப்பீடு, இல்லற வெற்றி, விருந்தோம்பல், வழிபாடு, நிமித்தங்கள், சடங்குகள், கலைகள், இயற்கைப் புனைவகள், மழையோடு ஒன்றிய வாழ்வியல் நிலைகள், பண்டமாற்றம், பரத்தமை, பண்பாட்டுப் பதிவுகள் ஆகிய வாழ்வியல் நெறிகளை நயம்பட உரைக்கிறது. மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளைக் குறுந்தொகையின் அகப்பாடல்கள் மௌனமாக எடுத்துக்காட்டுகின்றன. குறுந்தொகையின் வழி பழந்தமிழர் ஆடை, அணிகலன்கள் ஆகியவற்றின் தனிச்சிறப்புப் பெற்றிருந்தன.

## References


Engels, F. (1973) The Origin of The Family Private Property and the State, Munnetrap pathipagam, Chennai, India.

Govindaswamy Pillai, (1993) Tholkappiyam, Saraswathi Mahal Library, Thanjavur, India.

Krishnamoorthi, (1993) Thirukural, Tamil Nadu State Department of Archaeology, Chennai, India.

Nachinarkiniyar, (1925) Kalittokai, Nobil Achagam, Chennai, India.

Veerasamy, T.V (1931) Tamil Navel Munnootam, Manimekali Veliyedu, Madurai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License